**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2022**
**D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. யாப்பிலக்கணம் எதைக் கூறுகின்றது?
2. கட்டளைக் கலித்துறையில் இயற்றப்பட்ட யாப்பு நூல் எது?
3. எழுத்து எதனைச் சுட்டும்?
4. நாள், மலர் என்பன எத்தகைய சீர்?
5. வெண்பாவின் சிற்றெல்லை (அடி) எது?
6. கலிப்பாவிற்குரிய ஓசை எது?
7. அறுவகை இலக்கண நூலின் ஆசிரியர் யார்?
8. தொகை நிலைச் செய்யுளுக்குச் சான்று தருக.
9. விதர்ப்ப நாட்டார் ஆதரித்த நெறி யாது?
10. வலி என்பதன் பொருள் யாது?
11. ஒழுகிசை என்றால் என்ன?
12. நிதர்சன அணிக்கு வழுங்கப்படும் வேறு பெயர் யாது?
13. பொருளணியியலில் விளக்கிக் கூறப்படும் அணிகள் எத்தனை?
14. தண்டியலங்காரம் சுட்டும் உவம உருபுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
15. உருவக உருபு மறைந்து வருவதை எவ்வாறு அழைப்பர்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தமிழிலக்கணம் எத்தனை வகைப்படும்?
2. யாப்பருங்கலக்காரிகை எத்தனை இயல்களை உடையது? அவை யாவை?
3. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. அடி வகைகளை எழுதுக.
5. பாக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. தண்டியலங்காரத்தின் முப்பெரும் பிரிவுகள் யாவை?
7. வைதருப்ப நெறி கூறும் 'காந்தம்' என்னும் குணப்பாங்கைச் சுட்டுக.
8. பின்வருநிலையணி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) யாப்பிலக்கண நூல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) அடியார் வகைகளைச் சான்றுடன் விவரி.

2. (அ) வெண்பாவின் பொது இலக்கணத்தைக் கூறிச் சான்றுடன் விவரி.

   (அல்லது)

   (ஆ) வைதருப்ப நெறிக்கும், கௌட நெறிக்கும் இடையே உள்ள வேற்றுமைகளை அட்டவணைப்படுத்துக.

3. (அ) பின்வரு நிலையணியை விளக்கி வரைக.

   (அல்லது)

   (ஆ) சுவையணியை விளக்குக.

***